**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

Calendar Case No: DVC.1/2020

DEPOSITION OF WITNESS for Prosecution எ.ம.சா.1

Name : சுப்ரமணி

Husband Name : ரத்தினம்

Village : வி.களத்தூர்

Taluk : வேப்பந்தட்டை

Age : 62/ 2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 26.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.பெருமாள், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் அமுதா எனது மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள விஷயங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். 04.09.1989 அன்று திருவாளந்துறை தோளீஸ்வரர் ஆலயத்தில் எனக்கும் மனுதாரருக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் 10.01.1990இல் பிறந்த மகன் தான் பாலமுருகன் என்றால் சரிதான். எனது எதிருரையில் நான் மனுதாரருடன் மூன்று மாதம் தான் குடித்தனம் நடத்தினேன் என்றும், நான் ஊனமுற்றவர் என்பதால் என்னை ஏளனமாக மனுதாரர் என்னை நடத்தி வந்தார் என்று கூறினேன் என்றால் சரிதான். மனுதாரர் என்னுடன் வாழ மாட்டேன் என்று கூறிச் சென்றதற்காக நான் போலீஸில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றாலும், வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றாலும் இல்லை. 1993இல் 2ஆம் எதிர்மனுதாரர் பழனியம்மாளை திருமணம் செய்து கொண்டேனா என்றால் ஆமாம். எனக்கும் பழனியம்மாளுக்கும் பிறந்த மகன் தான் 3ஆம் எதிர்மனுதாரர் சுரேஷ் என்றால் சரிதான். பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வேண்டி H.M.O.P.88/2011 மனுதாரருக்கு எதிராக நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஊர் வழக்கப்படி மனுதாரரை நான் ஏற்கனவே விவாகரத்து

செய்துவிட்டேன் என்று மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கு தொடுக்கப்பட்ட தேதி 12.10.2011 என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் எனது மனைவி ஊர் வழக்கப்படி விவாகரத்து நடக்கவில்லை என்று கட்சி செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த விவாகரத்து மனு 30.04.2014இல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. CMA 7/2015 மேல்முறையீட்டு மனு மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 28.06.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நினைவிருக்கிறது. அதனை எதிர்த்து CMA SA 27/2019 என்ற எண்ணில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பினையே உறுதி செய்து 14.08.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகு என் பெயரிலான சொத்துக்களை 2ஆம் எதிர்மனுதாரர் பெயரில் 29.11.2011இல் இரண்டு தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. என் மகன் பாலமுருகன் என் மீது 2ஆம் எதிர்மனுதாரருக்கு நான் எழுதிக் கொடுத்த தானசெட்டில்மென்ட் செல்லாது என்றும், பூர்வீக சொத்துக்களில் தனக்கு பாதி பாகம் பிரித்துத் தர வேண்டியும், பெரம்பலூர், முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு 1/2012 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் A.S.202/2017 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மேல்முறையீடு மனுவும் முதன்மை மாவட்ட நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்து 05.01.2024இல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனை எதிர்த்து மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் SLP 7317/2024 என்ற வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீடும் 01.04.2024இல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் மறுபடியும் Review செய்திருக்கிறேன். Review செய்ததற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அ.வ.1/2012இல் நான் வெளிநாடு சென்று

33 ஆண்டுகள் அங்கு பணிபுரிந்து, ரூ.50,00,000/– சம்பாதித்து சுயமாக சொத்துக்களை வாங்கியுள்ளேன் என்று கட்சி செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. கடந்த 33 ஆண்டுகளாக நான் வெளிநாடு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல நான் 15 வருடங்கள் தான் வெளிநாடு சென்று வந்தேன். என்னுடைய கடவுச்சீட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் தயாராக இருக்கிறேனா என்றால் கடவுச்சீட்டு இல்லை. பழைய கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவை எல்லாத்தையும் தூக்கி தண்ணீரில் போட்டுவிட்டேன். எனது மகன் பாலமுருகன் அயன்பேரையூர் பிரிவு ரோட்டில் இரும்பு கம்பியால் தாக்கி கொலை முயற்சி செய்ததாக வி.களத்தூர் காவல் நிலையத்தில் கு.எண்.105/2013 என்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின்படி சிசி.49/2019 வழக்கானது வேப்பந்தட்டையில் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. சிசி.49/2019 வழக்கில் விசாரணை நடந்தது என்றால் சாட்சி இல்லை என்று சொல்லி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஊனமுற்றோர் உதவித் தொகை 27.11.2021 அன்றிலிருந்து தான் வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். ஊனமுற்றவர் என்று பதிவு செய்தது அப்போது தான் என்றால் சரிதான். 05.11.2020இல் இவ்வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாகவும் எனக்கு எதிராகவும் ஒரு தீர்ப்பு ஏற்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. அதை எதிர்த்து மேல்முறையீட்டை மகிளா நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் மீண்டும் விசாரிக்க உத்தரவிடப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. ரூ.90,000/– மற்றும் ரூ.10,000/– ஆக மொத்தம் ரூ.1,00,000/– எனது மனைவிக்கு கொடுத்து ஊர் வழக்கப்படி விவாகரத்து செய்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிருரையில் பக்கம் 2 இல் பத்தி 3இல் 1998இல் நான் 2ஆம் எதிர்மனுதாரருடன் திருமணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்தி வந்த நிலையில் மனுதாரருக்கு விவாகரத்து செய்ய ரொக்கமாக ரூ.90,000/–மும் செலவுக்கு ரூ.10,000/– மும் ஆக மொத்தம் ரூ.1,00,000/–

வாங்கிக் கொண்டு என்னை மனுதாரர் குலவழக்கப்படி விவாகரத்து செய்துவிட்டார் என்று நான் கூறியுள்ளது சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1988ஆம் ஆண்டு 2ஆம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்ட நிலையில், மனுதாரர் என்னிடம் ரொக்கமாக ரூ.90,000/–மும் செலவுக்கு ரூ.10,000/– மும் ஆக மொத்தம் ரூ.1,00,000/– வாங்கிக் கொண்டு என்னை மனுதாரர் குலவழக்கப்படி விவாகரத்து செய்துவிட்டார் என்று நான் கூறியுள்ளது சரிதான். மேற்கண்ட விவரத்தை நான் தாக்கல் செய்த HMOP.88/2011இல் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய எதிருரையில் 1998இல் மனுதாரர் என்னிடம் ரூ.1,00,000/– பெற்றுவிட்டு விவாகரத்து செய்துவிட்டார் என்று சொல்வது சரியா அல்லது என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1988இல் மனுதாரர் என்னிடம் ரூ.1,00,000/– பெற்றுவிட்டு விவாகரத்து செய்துவிட்டார் என்று சொல்வது சரியா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது மகன் பாலமுருகன் தாக்கல் செய்த அ.வ.1/2012இல் என் பேரில் கிரையப்பட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களில் உள்ள வருமானத்தைக் கொண்டு கிரையம் பெறப்பட்டதால் தனக்கும் பாதி பாகம் உண்டு என்று கட்சி செய்தார் ஆனால், மேற்படி சொத்துக்களை நான் கிரையம் பெற்று பழனியம்மாள் பெயரில் தானமாகக் கொடுத்துவிட்டேன். நான் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு எழுதிய மூன்று தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் மற்றும் மூன்றாம் நபரான மற்றொரு சுரேஷ் என்பவருக்கு எழுதிய கிரையப்பத்திரம் செல்லாது என்று பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் ஆம் அவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது, அதற்கு நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம். மாண்புமிகு உச்சநீதிமன்றம், பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்துள்ளது என்றால் ஆம் நாங்கள் அதை எதிர்த்து review செய்துள்ளோம், மீண்டும் உச்சநீதிமன்றத்திற்கு செல்வோம். நான் தனிப்பட்ட வழக்கறிஞரை வைத்துத் தான் கட்சி செய்கிறேன் என்றால் ஆம் அது என்னுடைய விருப்பம். இதுவரையிலும் நான் எனக்கு வசதியில்லை என்றும், இலவச சட்ட உதவி மையம் மூலம் வழக்கறிஞரை நியமிக்க வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பூர்வீக வீட்டை அடித்து உடைத்துவிட்டார்கள் என்று மனுதாரர் அமுதா, மகன் பாலமுருகன், அவருடைய மனைவி கலையரசி, என்னுடைய சகோதரி மற்றும் எனது

மகனின் மாமியாருமான சந்திரா ஆகியோர் மீது நான் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை முதலில் பதியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரை போலீசார் MF செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல வழக்கு போய்க் கொண்டிருக்கிறது. வழக்கானது போலீசாரால் MF செய்யப்பட்டு மீண்டும் recall செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அறிவிப்பு கொடுக்காமல் MF செய்யப்பட்டதால் மீண்டும் recall செய்ய மனு தாக்கல் செய்துள்ளேன். வண்ணாரம்பூண்டியில் உள்ள வீட்டில் நானும், 2ஆம் எதிர்மனுதாரரும் குடியிருக்கிறோம் என்றால் நான் இல்லை 2ஆம் எதிர்மனுதாரர் அதில் வசித்து வருகிறார். எனது மகன் பாலமுருகன் மாதம் ஒரு லட்சம் சம்பாதிக்கிறார் என்றும், அவர் என்னுடைய மனைவியான மனுதாரரை பராமரிக்கலாம் அவர் என்னிடம் வரவேண்டியதில்லை என்று நான் கூறியுள்ளதற்கு ஆதரவாக பாலமுருகன் பெயரில் உள்ள ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, இனி தாக்கல் செய்ய வேண்டும் என்றால் செய்கிறேன். பாலமுருகனுக்கு இரண்டு வீடுகள் இருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். பாலமுருகன் பல இடங்களில் கம்ப்யூட்டர் சென்டர் வைத்து நடத்தி வருகிறார் என்றும், அவர் ஒரு நாளைக்கு 3000/– சம்பாதிக்கிறார் என்றும் சொல்லியிருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். HMOP. 88/2011 வழக்கில் நான் 2ஆம் எதிர்மனுதாரரை நான் இரண்டாம் திருமணம் செய்து கொண்ட விவரத்தை கூறவில்லை என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. HMOP. 88/2011 விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் காவல் நிலையம் மூலமோ, சட்டப்பூர்வமான நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை அவர் ஏற்கனவே சென்றுவிட்டார். அவர் யாருடன் சென்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. HMOP.88/2011 மனுவில் மனுதாரர் அமுதா முறையற்ற வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர் 33 வருடங்களுக்கு முன்பு ஓடிவிட்டார் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மனுதாரர் என்னுடன் மூன்று மாதம் மட்டுமே வாழ்ந்து விட்டு பின்னிட்டு முறையற்ற வாழ்க்கை வாழ்வதாக நான் கூறும்பட்சத்தில் 1989லிருந்து 2011இல் விவாகரத்து தாக்கல் செய்யும் வரை மனுதாரருக்கு எதிராக சட்ட ரீதியாகவோ, காவல்துறை மூலமாகவோ நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை

நான் நடவடிக்கை எடுக்காமல் தப்பு செய்துவிட்டேன். குழந்தை பிறந்த பிறகு நான் மனுதாரர் அமுதாவின் காதில் பூச்சிக் கொல்லி மருந்து அடித்துவிட்டதாக அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பொய்ப்புகார். பின்னிட்டு மனுதாரர் மேற்கண்ட சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது பாலமுருகன் கைக்குழந்தையாக இருந்தபோது அவரை நான் மருத்துவமனையில் இருந்து எடுத்துக் கொண்டு ஓடிவிட்டேன் என்றால் இல்லை. பின்னிட்டு மனுதாரர் என் மீது காவல் துறைமூலம் புகார் கொடுத்ததின் அடிப்படையில் தான் கைக்குழந்தையான பாலமுருகன் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டார் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. இன்று வரை எனக்கும், மனுதாரர் அமுதாவிற்கும் உள்ள திருமண பந்தம் சட்டப்படி இரத்தாகவில்லை என்றால் சட்டப்படி இரத்தாகவில்லை, ஊர் வழக்கப்படி இரத்தாகிவிட்டது. ஊர் வழக்கப்படி திருமண பந்தம் இரத்தாகிவிட்டது என்ற வாதம் உச்சநீதிமன்றம் வரை நிராகரிக்கப்பட்டது என்றால் உச்சநீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த review மனு நிலுவையில் உள்ளது. மனுதாரர் அமுதா எனது சட்டப்படியான மனைவி என்றால் சரி ஆனால் என் மனசாட்சிப்படி அவர் எனது மனைவி இல்லை. பாலமுருகன் தாக்கல் செய்த வழக்கில் மேற்படி பாலமுருகன் எனக்கும் மனுதாரருக்கும் பிறந்தவர் இல்லை என்று கட்சி எடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 2ஆம் எதிர்மனுதாரர் எனது சட்டப்படியான மனைவி இல்லை என்று பெரம்பலூர், சார்பு நீதிமன்றம், பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் உறுதியாகிவிட்டது என்றால் சாட்சி பலமுறை கேள்வி கேட்டும் எனக்கு புரியவில்லை என்று பதில் அளிக்கிறார். பழனியம்மாள் எனக்கு சட்டப்படியான மனைவி இல்லை என்ற அந்தஸ்தை சார்பு நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் நான் அதனைப் பொருத்து review செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் நான் வெளிநாடு செல்லவில்லை என்றால் இல்லை 4, 5 வருடங்களாக நான் வெளிநாடு செல்லவில்லை. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகளின் தீர்ப்புக்கள் எனக்கு எதிராக இருப்பதால் அதனை நான் ஒப்புக் கொள்ளக் கூடாது என்ற காரணத்திற்காக ஞாபகம் இல்லை என்று வேண்டும் என்றே கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வருடம் ரூ.10,00,000/– வரை சம்பாதிக்கிறேன் என்றாலும், வேண்டும்

என்றே ஜீவனாம்சம் தருவதை தவிர்க்க வேண்டி பொய்யாகக் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 05.11.2020இல் இவ்வழக்கில் ஏற்கனவே எனக்கு எதிராகவும், மனுதாரருக்கு ஆதரவாகவும் தீர்ப்பான நிலையிலும், நான் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய கடமையிலிருந்து தப்பிக்கவே 27.11.2021இல் நான் ஊனமுற்றவர் என்று அரசாங்கத்தில் பதிவு செய்து அதற்குரிய உதவித் தொகையை அரசாங்கத்திடம் இருந்து பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த அ.வ.1/2012இல் நான் வெளிநாட்டில் இருந்த சம்பாதித்த ரூ.50,00,000/–த்தைக் கொண்டு அந்த வழக்கில் கட்டுப்பட்ட சொத்துக்களை என் பெயரில் கிரையம் பெற்றேன் என்று கட்சி எடுத்துவிட்டு தற்போது மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதை ஏமாற்றவே நான் வெளிநாடு கடந்த 5 வருடங்களாகச் செல்லவில்லை என்றும் வருமானம் எதுவும் இல்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.